


காட்டை அழிப்பது கூடும்;
அலை
கடலையும் தூர்ப்பது கூடும்;
மேட்டை அகழ்வதும் கூடும் -
விரி
விண்ணை அளப்பதும்
கூடும்;
ஏட்டையும் நூலையும்
தடுப்பது கூடும் -
உரிமை
எண்ணத்தை மாற்றுதல்
எப்படிக் கூடும்?



புரட்சிக்கவிஞர்

### ஓசூர் வட்டத்தில்

# பண்ணை குட்டையில் மூழ்கி உயிரிழந்த 2 பேர் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 7 -

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், எழுவப்பள்ளி கிராமத்தி லுள்ள பண்ணைக் குட்டையில் மூழ்கி உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் தலா ரூ.3 லட்சம் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், எழுவப்பள்ளி கிராமத்தி லுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு பயின்றுவந்த மாணவன் நித்தின் (வயது 8) த/பெ. மணிகண்டன் என்பவர் 5.03.2025 அன்று பிற்பகல் சுமார் 1.30 மணியளவில் பள்ளிக்கு அருகிலுள்ள தனியருக்குச் சொந்தமான பண்ணைக் குட்டையில் தவறி விழுந்த நிலையில் மாணவனைக் காப்பாற்ற முயன்ற பள்ளியின் தலைமையாசிரியர் கௌரிசங்கர் (வயது 53) ஆகிய இருவரும் நீரில் மூழ்கி உயிரிழுந்தனர் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில், உயிரிழந்த பள்ளி மாணவன் நித்தின் மற்றும் தலைமையாசிரியர் கௌரிசங்கர் ஆகிய இருவரின் குடும்பத்தினருக் கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழுந்த இருவரின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### தொகுதி மறுசீரமைப்பு : தென் மாநிலங்களைச் சேர்ந்த

# எம்.பி.க்களைக் கொண்டு கூட்டு நடவடிக்கை குழு அமைப்பது வரவேற்கத்தக்கது!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 7-

தொகுதி மறு சீரமைப்புக்கு எதிராக தென் மாநிலங்களைச் சேர்ந்த எம்.பி.க்களைக் கொண்டு கூட்டு நடவடிக்கை குழு அமைப்பது வரவேற்கத்தக்கது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து 6.3.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறி யிருப்பதாவது:L

2026 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட உள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதன்படி மக்கள் தொகை கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு உட்பட தென்னிந்திய மாநிலங்களில் எம்பி தொகுதிகள் குறைய வாய்ப்புள்ளது. இது தொகுதி மறுசீரமைப்பு பெயரில் தமிழகத்திற்கு இழைக்கப்படும் அநீதி என முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தார். மேலும், மார்ச் 5ம் தேதியன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடத்தப்படும். அரசியல் பாகுபாடின்றி மாநில நலனுக்காக இக்கூட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென தெரிவித்திருந்தார்.

இதன்படி, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் அனைத்துக் கட்சி கூட்டம் நடந்தது. 58 கட்சிகள் சார்பில் முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். எதிர்பார்த்ததுபோலவே பா.ஜ., த.மா.கா., புதிய தமிழகம், நாம் தமிழர் கட்சி, புதிய நீதிக்கட்சி ஆகிய 5 கட்சிகள் பங்கேற்கவில்லை. கூட்டத்தில், தென்மாநிலங்களை சேர்ந்த எம்.பி.க்களை கொண்டு கூட்டு நடவடிக்கைக்குழு அமைப்பது என ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநில நலனில் அக்கறை கொண்டு எதிர்க்கட்சிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்று, தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தது, தங்களின் கருத்துக்களை பகிர்ந்து கொண்டது வரவேற்கத்தக்க அம்சமாகும்.




கூட்டத்தில் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின், எம்பி தொகுதி 848 ஆக உயர்த்தப்பட்டு, தற்போதைய விகிதாச்சாரத்தின்படி தொகுதியை மறுசீரமைப்பு செய்தால் தமிழகத்திற்கு கூடுதலாக 22 எம்.பி. தொகுதிகள் வரை கிடைக்கும். அதேநேரம் மக்கள் தொகையின் படி மறுசீரமைப்பு செய்தால், எம்.பி. தொகுதிகள் 39ல் இருந்து 31 ஆக குறையும். மக்கள் தொகை கூடிய வடமாநிலங்களில் எம்.பி. தொகுதிகள் அதிகரிக்கும். இது கல்வியறிவை உயர்த்தி, மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்திய தமிழகம் உட்பட தென்மாநிலங்களுக்கு, ஒன்றிய பா.ஜ. அரசு தரும் தண்டனையாக பார்க்கப்படுகிறது.

இதை மனதில் கொண்டே அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி முதல்வர் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார். இந்த தீர்மானம் ஒன்றிய அரசின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படும். மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, எம்.பி.க்கள் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்வதில் தவறில்லை. ஏற்கனவே, கடந்த 2002ம் ஆண்டு தொகுதிகள் இந்த முறையில்தான் மறுசீரமைக்கப்பட்டன. ஆனால், எம்.பி.க்கள் தொகுதிகளில் எந்த மாற்றமும் செய்யவில்லை. அதைப்போலவே 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு பின், விகிதாச்சார அடிப்படையில்தான் தொகுதி மறுசீரமைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் பழைய நடைமுறையை அடுத்த 30 ஆண்டுகளுக்கு தொடரச் செய்யலாம். அதுதான் சிறந்த தீர்வாகவும் இருக்க முடியும்.

அடுத்தாண்டு தமிழகத்தில் நடக்க உள்ள சட்டமன்ற தேர்தலை கருத்தில்கொண்டு, தமிழகத்தில் ஒரு எம்.பி. தொகுதி கூட குறையாது என ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா மற்றும் பா.ஜ. தமிழக தலைவர்கள் கூறி வருகின்றனர். ஆனாலும், வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது என்பது போல, இது வடமாநிலங்களை வளப்படுத்தி, தென்மாநிலங்களின் வளர்ச்சியை சீர்குலைக்கும் செயல் என்றே அரசியல் கட்சிகள், விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, விகிதாச்சார அடிப்படையில் எம்பிக்களின் தொகுதியை நிர்ணயிக்க வேண்டுமென்ற அனைத்து கட்சிக் கூட்ட தீர்மானத்தை ஒன்றிய அரசு ஏற்று, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே தமிழகம் மற்றும் தென்னிந்திய மக்களின் விருப்பமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முதல்வர் – கழக தலைவர் "திராவிட பேரரசர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பத்தூர் நகர கழகம் சார்பில் நகர கழக செயலாளர் வழக்கறிஞர் சு.இராசேந்திரன் தலைமையில் மகாத்மா முதியோர் இல்லத்தில் வயதானவர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் அறுசுவை உணவும் வழங்கப்பட்டது. மகாத்மா முதியோர் இல்ல நிறுவனர் சகோதரர் எஸ்.கிஷோர் பிரசாத் வரவேற்க கழக சகோதரர்கள் டி.பி. பெருமாள், கோ.ராஜ்குமார், ஆர். பிரதீஷ், ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வி.வடிவேல், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.தமிழ்மணி, கிரிராஜ், பிரபு, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் க.நதிம் அஹமத், நகர இளைஞரணி அமைப்பாளர் டி.எஸ். மாதேஸ்வரன், துணை அமைப்பாளர் ஆர்.அரவிந்த், சட்டமன்ற தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எம்.சிவா, கழக நிர்வாகிகள் பி.விநாயகம், கே.தீனா, சங்கர்,நவீத், மற்றும் கழகத்தினர் உறுதிமொழி ஏற்றனர்.

### கவிஞர் நந்தலாலா மறைவு

# இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 7 -

" கவிஞர் நந்தலாலா மறைவு இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்" என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல்நலக்குறைவால் மறைந்த கவிஞர் - பட்டிமன்ற பேச்சாளர் நந்தலாலா அவர்களின் இல்லத்துக்கு நேரில் சென்று, அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

தலைசிறந்த கவிஞர் - பட்டிமன்ற பேச்சாளர் நந்தலாலா அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவுற்ற நிலையில், திருச்சி கருமண்டபத்தில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று நந்தலாலாவின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.

நந்தலாலா அவர்கள் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் துணைத்தலை வராகவும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.



தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் துணைத் தலைவராகவும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி, உடல்நலக்குறைவால் மறைந்த கவிஞர் – பட்டிமன்ற பேச்சாளர் நந்தலாலா அவர்களின் திருச்சி கருமண்டபத்தில் உள்ள இல்லத்துக்கு நேற்று முன்தினம் (5.3.2025) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று, அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, அவரை இழந்து வாடும் குடும்பத்தார் மற்றும் நண்பர்களுக்கு ஆறுதலையும். இரங்கலையும் தெரிவித்தார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது பெரும் பற்று கொண்டவர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீது மதிப்பும் - மரியாதையும் கொண்ட பண்பாளர். நந்தலாலா அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தார், நண்பர்கள், த.மு.எ.க.ச தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவிஞர் நந்தலாலா அவர்கள் மறைந்தாலும், அவரது பணிகள் என்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவி த்துள்ளார்.



முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, சோமண்டார்குடி ஊராட்சியில் ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் அரவிந்தன் தலைமையில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றி வைத்து, ஏழை எளிய பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கி, கழக மூத்த முன்னோடிகளுக்கு கழகத் துண்டு அணிவித்து மரியாதை செய்து, தமிழ் வாழ்க என கோலமிட்டு, இந்தித் திணிப்புக்கு எதிராக ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன கோஷங்கள் எழுப்பி அனைவரும் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர், இந்த நிகழ்வில் கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தளி ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது!

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் - கழக தலைவர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்!

கிருஷ்ணகிரி, மார்ச் 7-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் கெலமங்கலம் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் (5.3.2025) புதன்கிழமை மாலை 5 மணி, ராயக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஒன்றிய அவைத் தலைவர் எம். சின்ராஜ் தலைமை வகித்தார். நகர செயலாளர் கே என் ஆர் நாகராஜன் வரவேற்புரையாற்றினார். எல்.ஆர். ஜெயராமன் எம். கணேஷ், என். சின்னப்பையன் ராமி, குணசேகரன் எம். முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

கழக அமைப்பு துணைச் செயலாளர் பா. தாயம்கவி எம்எல்ஏ சிறப்புரை யாற்றினார். அமைச்சர் அர. சக்கரபாணி, மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம். எல்.ஏ., பி முருகன், எஸ்.ஏ. சத்யா மற்றும் கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், இன்னாள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் BLA 2, BLC யூத் கமிட்டி முகவர்கள் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாவட்ட பிரதிநிதி பி. ரஜினி நன்றியுரை ஆற்றினார்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !

